Source: *Tamil Murasu,* p2
Date: 6 April 2018

சூரிய ஒளியிலிருந்து மின்சக்தி: சிங்கப்பூரில் 'எரிசக்தித் தீவுகள்'

சிங்கப்பூர் விரைவில் எரிசக்தி தீவுகளைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. கடலில் சூரிய சக்தித் தகடுகள் தீவுகளாக மிதக்க விருக்கின்றன.

அந்த 'எரிசக்தித் தீவுகள்' பக்கத்தில் இருக்கும் தொழிற்பேட்டைகளுக்கு அல்லது வீடுகளுக்கு மின்சக்தியை உருவாக்கித் தரும்.

சிங்கப்பூர் சூரியசக்தி ஆய்வுக் கழகம் (Seris) இதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தும்.

இந்தக் கழகம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ளது. இதன் 10வது ஆண்டுவிழா நேற்று இந்தப் பல்கலைக்கழகத்தின் ஷா அறநிறுவன முன்னாள் மாணவர் சங்கத்தில் நடந்தது.

அதில் மூன்று திட்டங்கள் தொடங்கப்பட்டன. அந்தத் திட்டங்களில் எரிசக்தித் தீவுகள் திட்டம் ஒன்று. தெங்கா நீர்த் தேக்கத்தில் இந்தக் கழகமும் பொதுப் பயனீட்டுக் கழகம், பொருளியல் வளர்ச்சிக் கழகம் ஆகிய அமைப்புகளும் சேர்ந்து நிர்மாணித்துள்ள உலகின் ஆகப் பெரிய சூரியசக்தித் தகடுகள் மிதவை பரிசோதனைக்கூடத்தை அடுத்த சில ஆண்டுகளில் இதர நீர்த்தேக்கங்களிலும் விரிவு படுத்துவது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

இத்தகைய நேரத்தில் எரிசக்தி தீவுகள் திட்டம் நடப்புக்கு வருகிறது.

இப்போது இருப்பதைவிட இன்னும் சக்திவாய்ந்த சூரியசக்தித் தகடுகளை உருவாக்குவதற்காக இந்தக் கழகம் முயற்சிகளை முடுக்கிவிட்டு இருக்கிறது.

இதன் தொடர்பில் நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், தேசிய ஆய்வு அறநிறுவனத்தின் உன்னத ஆய்வு மற்றும் தொழில் நுட்ப நிறுவன வளாகம் ஆகிய வற்றுடன் சேர்ந்து கழகம் பாடுபட்டு வருகிறது.

சூரிய ஒளியில் 30%ஐ எரிசக்தியாக மாற்றக்கூடிய ஆற்றல் மிக்க தகடுகளை உருவாக்க வேண்டும் என்பது இலக்கு.

மூன்றாவது திட்டமாக, விலை மலிவான அதே வேளையில் அதிக ஆற்றல்மிக்க சூரிய சக்தித் தகடுகளை உருவாக்குவது பற்றி சிங்கப்பூர் சூரிய சக்தி ஆய்வுக் கழகம் ஆராய்ந்து வருகிறது. இத்தகைய தகடுகளைக் கட்டடங்களில் பொருத்த முடியும். இதனால் நிலப் பற்றாக்குறையைச் சமாளிக்கலாம்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.